# இந்தியா கஷ்மீரில் என்ன செய்கின்றதோ அதனையே நாமும் இங்கு செய்கின்றோம்

## அமைச்சர் ரஞ்சன் பேட்டி

'இலங்கை ராணுவத்தில் உள்ள ஒரு சிப்பாய் இந்திய ராணுவத்தின் பத்து ஜவான்களுக்குச் சமமானவர்கள்.' இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் இந்தியாவில் இருந்து வெளிவரும் சண்டே சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். புலிகளுடனான போரில் இந்தியாவே தோல்வி கண்டது. ஸ்ரீலங்கா ராணுவம் எப்படித் தற்போதைய யுத்தத்தை வெற்றி கொள்ளப் போகின்றது எனச் சண்டே நிருபர் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். 'யாழ்நகர்ப் பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சின் போது பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து கேட்கப்பட்ட போது விமானங்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடாத்த முடியாது குண்டுவீச்சையே மேற்கொள்ளலாம். இச்சமயத்தில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:-3-50

# முரசொலி

முரசு 4 ஒலி 241 வெள்ளி 12-10-1990 (புரட்டாதி 26) ற.அவ்வல் 22

# கொழும்பில் 200 தமிழர் கைது

# கடும் சோதனை தொடர்கிறது

## தமிழர் வருகையால் அரசாங்கம் அச்சம் விடுதிகளில் பொலிஸார் தேடுதல்

ஸ்ரீ லங்கா தலைநகர் கொழும்பில் சுமார் இருநூறு தமிழர்களைப் பொலிஸார் சுற்றி வளைத்துள்ளதாக ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. கொழும்பிற்கு நிறையத் தமிழர்கள் வருவதில் மறைமுகக் காரணம் இருக்கிறது என மூத்த அமைச்சர் ஒருவர் கூறினார் என்றும் இச்செய்தி மேலும் கூறியது.

தக்க அனுமதியுடன் பதிவு செய்யப்படாத விடுதிஒன்றில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பெருந்தோட்டத் தொழில் அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் தெரிவித்தாக ஏஜென்சிச் செய்திகள் கூறின.

பதிவு செய்யப்படாத விடுதிகளையும், எவ்வித நோக்கமுமின்றி நகரில் சுற்றித்திரிபவர்களையும், சந்தேகப்படுபவர்கள் மீதும் தக்க நடவ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகர மின் இணைப்புக்களை சீர்செய்ய உபகரணங்கள் இல்லை

அண்மைய விமானத் தாக்குதல்களினால் பெரிதும் சேதமடைந்துள்ள யாழ்நகர மின் கம்பங்கள்மற்றும் இணைப்புக்களை உடனடியாகத் திருத்த முடியாதுள்ளதாக யாழ் மாநகரசபை மின்சாரப்பகுதியினர் தெரிவித்தனர்.

பெரும் பாலான மின்கம்பங்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இறக்கக்கண்டி முகாம் மீது புலிகள் கடும் ஷெல் தாக்குதல்

திருமலை மாவட்டத்தில் உள்ள இறக்கக்கண்டி இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் சேத விபரம் தெரியவில்லை

இதே சமயம் சித்தாண்டிப் பகுதியில் புலிகளின் பொறி வெடியில் சிக்கி இராணுவ சிப்பாய் ஒருவர் காலை இழந்தார். (து)

### பேச்சுவார்த்தை பற்றி கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

## புலிகளை ஒழிப்பதில் தானே ஸ்ரீலங்கா கங்கணம்; தனித்துவமின்றேல்போராட்டம்

''ஸ்ரீ லங்கா அரசு பலமுறைபுலிகளைஒழிக்கும்வரை பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடாது எனத் தெரிவிப்பதனை நீங்கள் அறிவீர்கள்'' என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தன்னைப் பேட்டிகண்ட இந்தியச் செய்திச் சஞ்சிகையான ''சண்டேயின் நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் சுட்டிக்காட்டினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''ஸ்ரீ லங்கா அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த புலிகள் தயாராக உள்ளனரா?'' எனக் கேட்கப்பட்ட

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று முன்தினமிரவு காங்கேசன் இராணுவ முகாமில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த கனகரத்தினம் இந்திரன் விராங்கொடை தெல்லிப்பழை என்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் அகதி முகாம்கள் அமைப்பு

வடக்குக் கிழக்கில் இருந்து கொழும்பிற்குச் செல்லும் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தங்கவைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கென கொழும்பில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிப் பகுதிகளில் ஏற்கனவே அகதி முகாம்கள் திறக்கப்பட்டுவிட்டதாகவும் தேவையைப் பொறுத்து இரத்மலானையிலும் முகாம் ஒன்று திறக்கப்படலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (து)

### கல்லடி - உப்போடையில் சம்பவம்

## முஸ்லிம்கள் சென்ற வான் மோதி மூன்று தமிழர்கள் ஸ்தலத்தில் பலி

முஸ்லிம்கள் சென்ற மினி வான் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் வீதியால் சென்று கொண்டிருந்த மூன்று தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

கல்லடி உப்போடையில் இடம்பெற்ற இவ் விபத்தில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த கணவன் மனைவியான கனகசபை (55), திருமதி கனகசபை (42) ஆகியோரும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வண்ணைச் சிவன் ஆலயத்தில் திருட்டு கொள்ளையரால் நகைகள் உரசியும் சோதனை

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணம் வண்ணைசிவன்கோயிலில் உள்ள மூலஸ்தானக்கதவு திருடர்களால் உடைக்கப்பட்டு அங்குள்ள அம்மன் மற்றும் வேறுசில விக்கிரகங்கள் பிரட்டப்பட்ட நிலையில் அங்குள்ள பெறுமதி வாய்ந்த நகைகள், யந்திரத் தகடுகள் குத்துவிளக்குகள் போன்றவை திருடப்பட்டுள்ளன.

இங்குள்ள சில இயந்திரத் தகடுகளையும், மற்றும் சில நகைகளையும் திருடர்கள் உரசிப்பார்த்து எடுத்துச் சென்றுள்ளனர். (ப 11 து)

## பலாலியிலிருந்து ஆட்லறி ஷெல்; கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் பரவலாக ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டன.

இவ் ஆட்லறி ஷெல்கள் தெல்லிப்பழை, அளவெட்டி, மாவிட்டபுரம் விளான் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதேவேளை கீரிமலைக் கடற் பகுதியில் தரித்து நிற்கும் கடற்படைக் கப்பலிலிருந்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் உஷார் நிலை

கொழும்பில் நேற்று முன்தினம் முதல் பாதுகாப்பு நிலைமைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

**'எமது** இன விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு இப்போது பொங்கு சனி!; அவரது இலட்சியம் நிறைவேறும்!' என ஆருடம் கூறுகிறார் சோதிடர் கே. வி. ரி. ஞானா.

இன்னும், இக்காலத்துக் கிரகமாற்றங்களால் ஈழத்தமிழர் வாழ்வில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன என்று சோதிட ரீதியாக இவர் ஆராய்கிறார்.

புரட்டாதி மாதத்துக் கடைசிச்சனி வாரமாகிய நாளை, முரசொலியில் இச்சோதிடக் கண்ணோட்டத்தைப் படித்துப் பாருங்கள்!

## எழுதுநர் பதவியுயர்வுப் பரீட்சை வடமாகாணத்தில் இம்முறை இல்லை

அரசாங்க திணைக்களங்களில் சிறுபணி செய்பவர்களை பொது எழுதுநர் சேவையின் 11 ''ஆ'' பிரிவுக்கும், தட்டெழுத்தாளர் சேவையின் 11 ''ஆ'' பிரிவுக்கும், நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (1990), இவ்வாண்டு நவம்பர் மாதம் முதலாம், மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, அநுராதபுரம் பதுளை, கம்பஹா, களுத்துறை, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, குருநாகல், மொனறாகலை, புத்தளம், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய நிலையங்களில் மட்டுமே இப்பரீட்சை நடைபெறவிருக்கின்றது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் எந்தவொரு பரீட்சை நிலையமும் இப்பரீட்சைக்கு அமைக்கப்படவில்லை இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் வடமாகாணத்திலுள்ள பரீட்சார்த்திகள் அயலிலுள்ள மாகாணம் ஒன்றிற்குச் சென்றே பரீட்சை எழுதவேண்டிய நிலையிலுள்ளனர். (18-இ)

## ★ ஒரே மாவட்டத்தில் 5 வருட சேவை புரிந்த கல்வித் திணைக்கள ஊழியர்கள் பிறமாவட்டங்களுக்கு இடமாற்றம்

வடக்குக்கிழக்குப் பகுதிக்கல்வித்திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய ஊழியர்கள் யாவரும் பிறமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது பற்றிய சுற்றுநிருபம் வடக்குக்கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் சம்பந்தப்பட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தின்படி 31. 12. 90 இல் 5 வருடங்கள் ஒரேமாவட்டத்தில் தொடர்ச்சியாகச்சேவை செய்த ஊழியர்கள் அனைவரும் குறிப்பாக இணைந்த சேவையைச் சேர்ந்தவர்கள் 01. 01. 91-ல் இருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

ஒரே மாவட்டத்தில் 5 வருடங்கள் தொடர்ச்சியாகச் சேவை செய்த ஊழியர்கள் அனைவரும் இடமாற்ற விண்ணப்பங்களை உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றத்துக்கு விண்ணப்பம் செய்யாதோர், ஐந்துவருட சேவையை முடித்து இருந்தால் அவர்கள் விரும்பாத இடத்துக்கு அவர்களது விருப்பத்தைக் கருத்திற் கொள்ளாமலேயே இடமாற்றம் செய்யப்படுவர் எனவும் கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (ப- 17இ)

## காட்டுயானைகள் தொல்லை; மன்னார் ஊழியர் பாதிப்பு

மன்னாருக்கு அரச ஊழியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தற்போது சைக்கிள்களில் செல்கின்றார்கள்.

இவர்களுக்கு இரவுப் பயணத்தின் போது யானைத் தொல்லை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் வலைப்பாட்டுச் சந்திக்கு அண்மையில் சில அரசஊழியர்கள் யானைக் கூட்டத்திடமிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டார்கள்.

வலைப்பாட்டுச் சந்தி, செம்மன்குண்டு, பாலிஆற்றுக் காட்டுப்பகுதிகளில் யானைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (17இ)

## ராஜீவ் காந்திக்கு நெருக்கடி

## கர்னாடக மாநில சர்ச்சை வலுவுறுகிறது

கர்னாடக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இந்திரா காங்கிரஸுக்கும் தலைமைப்பீடத்துக்கும் இடையிலான பலத்த நெருக்கடி கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்திக்கு தலையிடியை உண்டு பண்ணியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடல் நிலை சீரில்லாதபடியால் கர்னாடக முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டேல் தனது பதவியை ராஜினாமாச் செய்வார் என தலைமைப்பீடம் கடந்த வாரம் தெரிவித்திருந்தது.

ஆனால் இதனை மாநில இ. காங்கிரஸ் நிராகரித்தது. ராஜினாமாச் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என அது கூறியது

ஆயினும் தன் பிடியில் தலைமைப்பீடம் வலுவாக இருந்தது.

மாநிலத்தில் இதனால் காங்கிரஸ் பிளவுபடும் என்று எச்சரிக்கப்பட்டது,

இது இவ்வாறு இருக்க, ஆளுநர் திரு. பானு பிரதாப் சிங்கின் சிபார்சை அடுத்து ஜனாதிபதி மாநில சட்டசபையைக் கலைத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது, (ஸ்ரீ)

## ★ மண்டைதீவில் நடந்தது....

## கைதான இளைஞர்களுக்கு கருத்தடை மாத்திரை

மண்டைதீவில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட எட்டு இளைஞர்களுக்கு இராணுவம் கருத்தடை மாத்திரைகளை வழங்கியதாம். தற்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ள இவ்விடயம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:- மண்டைதீவில் உள்ள மருத்துவமனை ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த மாத்திரைகளை எடுத்த இராணுவத்தினர் தாம் கைது செய்த அந்த எட்டு இளைஞர்களிடமும் கொடுத்து அவற்றை விழுங்குமாறு அச்சுறுத்தினராம். இராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி மாத்திரையை அந்த இளைஞர்கள் விழுங்கியதை அவதானித்த இராணுவத்தினர் குதூகலம் கொண்டு ''ஏய் இனி உங்களுக்கு பிள்ளை பிறக்காது, புலிக்குட்டி பிறக்காது'' எனப் புலம்பினராம். (ப-12இ)

## சீனியின் விலை மேலும் குறைப்பு

சீனியின் சில்லறை விலை இன்று முதல்கிலோ 75 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அறிவித்துள்ளது.

இதன்படி முன்னர் 26 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒருகிலோ வெள்ளைச்சீனி இனிமேல் 25 ரூபா 75 சதமாக விற்பனை செய்யப்படும்.

முன்னர் 26 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பழுப்புச் சீனி இனிமேல் 25 ரூபா 25 சதமாக விற்பனை செய்யப்படும். (இ)

## பட்டப்படிப்பு மாணவர் கவனத்திற்கு

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத்தவறிய கலை முதற் தேர்வு (ஜி. ஏ. கியூ), விஞ்ஞான முதற்தேர்வு (ஜி. எஸ். கியூ), கலைமாணி மாணவர்கள் உடனடியாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கிளிநொச்சித் தபாலகத்தில் முத்திரை, ரொக்கப்பணம் மாயம்

கிளிநொச்சி பிரதம தபாலகம் கடந்த வாரம் முதல் இயங்கி வருகின்றது.

அண்மையில் செஞ்சிலுவைச் சங்கத்தால் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட தபால்கள் தபால் நிலையம் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பரந்தன் தபாலகமும் கிளிநொச்சி தபாலகமும் கிளிநொச்சியில் இணைந்து இயங்குகிறது.

இதேவேளை கிளிநொச்சித் தபாலகத்தில் இராணுவ நடவடிக்கைக்கு முன் கையிருப்பில் இருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (35இ)

## சங்கத் தலைவர் கலந்துரையாடல்

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்களின் கலந்துரையாடல் இன்று 12-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் 'மணியம்ஸ்' கட்டிடத்தில் உள்ள மாவட்டக் கூட்டுறவுச்சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்வது, புதிய முயற்சிகள், கூட்டுறவுச்சங்கங்கள் எதிர்நோக்கும் விடயங்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## அன்னைதிரேசாவுக்கு ரஷ்ய 'நேரு' விருது

சமூக சேவகியும் நோபல் பரிசு பெற்றவருமாகிய அன்னைதிரேசாவுக்கு 1990-ம் ஆண்டுக்கான சோவியத் நாட்டு 'நேரு' விருது வழங்கப்பட்டுள்ளது.

உலகெங்குமுள்ள திக்கற்றவர்களின் நல்வாழ்வுக்காக அன்னை திரேசா ஆற்றிவரும் அரும்பணியைப் பாராட்டியே இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ)


## சிறு விளம்பரம

### தவறிவிட்டது

மார்க்கண்டு குமாரு, பூங்காவன வீதி (இல. 371822186 V) எனும் பெயர் விலாசமுள்ள அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் நாகலிங்கம் கடை, நல்லூர்ச் சந்தை, நல்லூர் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். 10060


## யாழ் திணைக்களக் கூட்டத்தில் தீர்மானம்

## சகல பாடசாலைகளினதும் அதிபர் ஆசிரியர் கடமை புரியவேண்டும்

''அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் கடமைக்குச் செல்ல வேண்டும்'' என்று யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

● சகல வகுப்புகளும் முன்னர் போல் நடத்தப்படல் வேண்டும்.

● பாடசாலைகளில் பதுங்கு குழிகள் அமைத்தல் போன்ற பாதுகாப்பு ஒழுங்குகளை முதலில் மேற்கொள்ள வேண்டும்.

● காலநிலை சீராகும்வரை பாடசாலைகளை ஒருநேரப் பாடசாலைகளாக நடாத்துதல் வேண்டும்.

● போக்குவரத்து வசதிகள் சீராகும்வரை மாணவர்களை அவர்களின் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் சேர்வதற்கு அதிபர்கள் தற்காலிக வசதி செய்து கொடுக்க வேண்டும்.

● அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகள் தொடர்பாக அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் ஆலோசனையுடன் அதிபர்கள் மாற்று ஒழுங்குகளை மேற்கொண்டு அவ் ஒழுங்குகள் பற்றி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

● சேதமடைந்து நடத்த முடியாத நிலையிலுள்ள பாடசாலை அதிபர்கள் தத்தமது உதவிக் கல்விப்பணிப்பாளரின் அனுசரணையுடன் மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

● வெளிமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து இருக்கும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் கல்விபயில அதிபர்கள் உதவ வேண்டும். அவர்களை அனுமதிப்பதற்கு ஆவணங்கள் வேண்டும் என்று நிர்ப்பந்தித்தல் ஆகாது.

● ஆசிரியர்கள், தத்தமது பாடசாலைகளிலேயே கற்பித்தல் வேண்டும் என்ற தீர்மானங்களும் மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

அண்மையில் இராணுவ நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிப்படைந்திருக்கும் மத்திய கல்லூரி, வேம்படி, இந்து மகளிர்கல்லூரி சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆகியனவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் உயர்தர வகுப்புகள் உட்பட சகல வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும் என்று கல்வித் திணைக்களம் கூறியது. (70-ஸ்ரீ)


## இழுபொறி இயந்திரம் திருத்த வேலை

இச்சபைக்குச் சொந்தமான போட் (Ford) இன இழுபொறி இயந்திரத்தினை முழுமையாக கீழ்க்காணும் விபரப்படி திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற பொறி திருத்தும் (மெக்கானிக்) நிறுவனம் / தனிநபரிடமிருந்து கூறுவிலைகள் 24.10.1990-ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் கடிதத்தில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

### வேலை விபரம்

மேற்படி இன இழுபொறி இயந்திரத்தினை முழுமையாகக் கழற்றி பழுதடைந்த, திருத்தம் செய்யப்பட வேண்டிய உதிரிப்பாகங்களின் விபரங்களைப் பட்டியல் போட்டுத்தந்து அவற்றை இச்சபை கொள்வனவு செய்து தந்தவுடன் மீளப் பொருத்துவதற்கு வேண்டிய சகல வேலைகளையும் செய்து பொருத்தி வாகனம் திருப்திகரமாக இயங்கக்கூடிய வகையில் ஒப்படைத்துவிடல்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
05.10.1990

10059

# சிறிய செய்திகள்

## கொத்தணி அதிபர் கூட்டம்

பாடசாலை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 15-ம திகதி காலை 10 மணிக்கு சகல கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் நடைபெறும்.

சகல கொத்தணி அதிபர்களும், பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டப் பணிமனைகளில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (70 கி)

## வெளிநாட்டுக் காசோலை ஏற்கப்படுகிறது

சுன்னாகம் இலங்கை வங்கியில் தற்போது வெளிநாட்டுக் காசோலைகளும் ஏற்கப்படுகின்றன. சில காலமாகஇடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இப்பணி இப்போது மேற்கொள்ளப்படுகிறது.

ஆயினும் வைப்புகள் ஒழுங்காகக் கிடைக்காததால் பணக் கொடுப்பனவுகளை வழங்க முடியவில்லை எனவும், கிடைக்கும் பணத்திற்கேற்ப ஒருவருக்கு 1500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது எனவும் முகாமையாளர் கூறினார்.

வர்த்தகர்கள் பலரும் கொள்வனவுக்குப் பணத்தையே பாவிப்பதால் அவர்கள் வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-2 கி)

## பருத்தித்துறை களஞ்சியம் திருத்தப்படுகிறது

பருத்தித்துறை சுங்க இலாகா குதம் கப்பலில் இருந்துஇறக்கப்படும் பொருட்களை சேமித்து வைக்கு நோக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் திருத்தப்படுகிறது.

இந்தக் குதம் சிறிலங்கா, இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்து காணப்படுகிறது.

இக்குதத்தில் 2000 தொன் உணவுப் பொருட்களை சேமித்து வைக்க முடியும். தற்போது கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருட்களை உடனுக்குடன் அனுப்ப லொறி வசதி இல்லாததால் இக்குதம் திருத்தப்படுவது முக்கியமாகக் கருதப்படுகிறது. (ப.17கி)

## ஆளடையாள அட்டை; விண்ணப்பிப்போர் தொகை குறைவு

யாழ் மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப் போர் தொகை பெருமளவு குறைந்துள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டுத் தபாலகங்களில் முத்திரைகள் எதுவும் இல்லாமையே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது. (33கி)

## புதிய அதிபர்

உடுவில் உதவி அரசாங்க அதிபராக வே. வீரபத்திரபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்,

புலோலியைச் சேர்ந்த இவர் வட - கிழக்கு மாகாண சபையில் கடந்த ஆறு மாதமாக நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்.

உடுவில் பகுதிக்குக் கடந்த எட்டு மாத காலமாக உதவி அரசாங்க அதிபர் எவரும் இருக்கவில்லையென்பதும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கமே உடுவில் பதில் அதிபராகக் கடமை புரிந்து வந்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ப-2 கி)

## உதவிப்பணம் இதுவரை இல்லை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் கடந்த ஜூலை மாதம் முதல் வழங்கப்படவில்லை.

உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதற்கான முயற்சிகள் தயாரிக்கப்பட்டு விட்டாலும் செயலகத்திலிருந்து இன்னமும் இதற்கான உத்தரவு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ப-2 கி)

## மதுவரி நிலையத்தில் திருட்டு

அண்மைக் கால அசம்பாவிதங்களினால் கிளிநொச்சியில் அமைந்துள்ள மதுவரி நிலையமும் சேதப் படுத்தப்பட்டும், பொருட்கள் களவாடப்பட்டும் உள்ளன.

கிளிநொச்சி - கண்டி வீதியில் அமைந்துள்ள மேற்படி மதுவரி நிலையத்தின் பின்பகுதி ஷெல் தாக்குதலால் சேதப்படுத்தப்பட்டும், அங்கிருந்த நிலை, யன்னல், கதவுகள் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருட்கள் இனந்தெரியாதோரால் சூறையாடப்பட்டும் உள்ளதாகத் தெரிகிறது. (47கி)

## அவர்கள் வழியில் இவர்களும்

வீதிகளின் பல மூலைமுடுக்குகளிலும் கடைகள் அமைத்து சைக்கிள் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளோர் சாதாரணமாகச்சைக்கிள் ரியூப் ஒட்டுவதற்கு ஐந்து ரூபாவைக்கறந்து விடுகிறார்கள்.

இப்போது நிரந்தரசைக்கிள் கடைக்காரர்களும் சைக்கிள் காரர்களிடம் இதே அளவு பணத்தைசைக்கிள்ஓட்டுவதற்கென வசூலிக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-10 ஸ்ரீ)

## மனிதன்

தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் மக்கள் படும் வாட்டத்தைத் தமக்குச் சாதகமாக்கி பிறர் பொருளை ஏப்பமிடும் பிரகிருதிகள்சர்வசாதாரணமாக நடமாடும் இக்கால கட்டத்தில் பிறர் பொருளுக்கு இச்சையுறாத நல்ல நெஞ்சங்களும் வாழத்தான் செய்கின்றன. இதனை நிரூபிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார் கல்வியங்காடு டச்சுவீதியைச் சேர்ந்த ஓர் கடை (சோமா கடை) உரிமையாளர் நேற்று முன்தினமிரவு தனது கடையில் பொருள் வாங்க வந்த ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த அகதி ஒருவர் ஆயிரம்ரூபாநோட்டுடனும் அடையாள அட்டையுடனும் தவறவிட்டுச் சென்ற பர்ஸை காலையில் அவரிடமே ஒப்படைத்து மனித கண்ணியம் காத்தார் அந்த நல்லவர். (ஸ்ரீ)

## படிவங்களுக்குத் தட்டுப்பாடு

தாளையடிப் பகுதியிலுள்ள உப அஞ்சல் அலுவலகங்களில் பாவனைப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு. ஏற்பட்டுள்ளது உபஅஞ்சல் அலுவலகங்களில் நாளாந்த உபயோகத்திற்குத் தேவைப்படும் கணக்குத் தாள், கணக்குப்புத்தகம் இல்லாமையால் பெரும்பாலான உபஅஞ்சல் அதிபர்கள் கொப்பிகளிலேயே நாளாந்த கணக்குகளைப் பதிகின்றனர்.

கடந்த எட்டுமாதத்திற்கு மேலாக அஞ்சற் திணைக்களக் களஞ்சியத்திலிருந்து பாவனைப்படிவங்கள் அனுப்பப்படாமையே இத்தட்டுப்பாட்டுக்குக்காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (18 கி)

### விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

# விரும்பாத தீர்வை ராணுவ பலத்தால் திணிக்க முடியாது

கடந்த மூன்று ஆண்டு கால பாடத்தை தமிழீழம் மறந்துவிடக்கூடாது. ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்டது. தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத தீர்வு ஒன்று எம்மீது திணிக்கப்பட்டது. அதனை ஏற்க மறுத்தமைக்காக இந்தியா 10.10.1987 இல் பெரும் போர் தொடுத்தது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில்அரசுநடாத்தியதாக்குதலுக்காக இந்தியா ஸ்ரீலங்காவைக்கண்டித்ததுவான் வெளிவந்துஉணவு போட்டது.

10. 10. 1987 இல் இந்தியா தமிழீழம் மீது போர் தொடுத்தபோது யாழ் குடாநாட்டில் தொடர்ந்து ஊரடங்கு அமுலானது! ஆலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் என்பன அழிக்கப்பட்டன.

2000 க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 5 லட்சம் பேர் குடாநாட்டிற்குள் அகதிகளாகினர். யாழ் பெரியாஸ்பத்திரியில் டாக்டர்கள், தாதிகள், நோயாளிகள் என 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 2½ வருடம் நடந்த இந்த யுத்தத்தில் 5000க்கு மேல் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

கூலிப்பட்டாளங்களைக் கொண்டு தமிழ்மக்கள் மீது தீர்வுகள் திணிக்கப்பட்டன, ஆனால் தமிழீழம் இவற்றுக்கு எதிராகப் போராடியது இறுதியில் இந்தியா தமிழ் மக்கள் மீது அடக்கு முறையையோ அல்லது வேறு எந்த விதமாகவோ அவர்கள்விரும்பாத தீர்வை திணிக்க முடியாது என்பதை உணர்ந்து இங்கிருந்து வெளியேறியது!

இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு தனக்குச் சார்பாகச் செயற்படுத்தி வெற்றியும் கண்டது தமிழீழ ஸ்ரீலங்கா பேச்சுவார்த்தையை தனக்குச் சார்பாகப் பயன்படுத்த முயற்சித்தமைக்கு நாம் விட்டுக் கொடுக்காததன் விளைவே தமிழீழ - ஸ்ரீலங்கா போராகும்.

தமிழ் மக்கள் மீது அவர்கள் விரும்பாத தீர்வை ராணுவ பலம் கொண்டு திணித்து அமுற் படுத்த முடியாது என்பதை தமிழீழ இந்தியப்போர் ஸ்ரீலங்காவுக்கு உணர்த்தியிருந்தது.

இந்திய - தமிழீழப் போரின் போது ஸ்ரீலங்கா தனது படை பலத்தை பெருமளவில் வளர்த்துக் கொண்டுதனது படை பலத்தை நம்பியதும் தமிழர்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சிங்கள இனவாதமுமே இப்போருக்கு காரணங்களாகும்.

இந்தியா செயற்பட்டதைப் போலவே ஸ்ரீலங்காவும் செயற்பட்டு வருகிறது. கால வரையறையின்றி ஊரடங்கு ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் தாக்கப்பட்டன.

குறுகிய காலத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் எட்டு லட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டனர். ஒரு லட்சத்துக்கும்மேல் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றனர்.

ஒவ்வொருநாளும் வடமராட்சியில் நடந்த தாக்குதலில் அதிகமான குண்டுகள் தமிழ் மக்கள்மீது வீசப்படுகின்றன.

இந்தியாவுக்கு இது குறித்து பேசும் தார்மீக பலம் கிடையாது என ஸ்ரீலங்கா நினைத்தது. இந்தியா மௌனம் சாதிக்கின்றது.

இந்தியா செய்ததைப் போலவே கூலிப்பட்டாளங்களின் துணையோடு தமிழ் மக்கள்மீது தீர்வைத் திணிக்க ஸ்ரீலங்கா அரசு முற்படுகிறது.

இம்முயற்சியின் புதிய பரிமாணம்: முஸ்லிம்கள், முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி, ஐ. தே. கட்சி என்பனவற்றைச் சேர்ந்த முஸ்லிம்களும் அவர்களின் ஊர்காவற் படையும் தமிழ் மக்களை அழித்து அவர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் இருந்து துரத்தியும் வருவதாகும்.

தமிழீழப் போராட்டத்தில் நாம் எத்தனையோ துரோகத்தனங்களையும் துரோகிகளையும் சந்திக்கின்றோம் இந்தியாவுக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஐக்கிய இலங்கையில் தீர்க்க முடியாது என்று நன்கு தெரியும்.

இந்தியா காலம் தாழ்த்தாது தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை கடந்தநாற்பத்திரண்டு வருடகாலத்தைப் படிப்பினையாகக் கொண்டு குறுக்கு வழியில் மக்களை அழிக்கும் முயற்சியைக் கைவிட்டு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழர்களைக் கொலை செய்து அடக்குவதற்கு என உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா படைக் கூட்டங்கள் எல்லாம் சிங்கள மக்களைக் கொலை செய்யப் பயன்படுகிறது.

சிங்களவர்கள் இதனை உணர்ந்து தமிழர்களின் நியாயமான போராட்டத்தை அங்கீகரிப்பதன்மூலம் அடக்குமுறை அரசின் அழிவுகளில் இருந்து தம்மையும் காப்பாற்றலாம்.

தமிழீழ மக்களே! கடந்த மூன்றாண்டு காலப் படிப்பினையை மறந்துவிட வேண்டாம். ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல் அடக்குமுறைக்கு கலங்காமல் உறுதியான மன வலிமையுடன் போராடினால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இதுதான் நமது கடந்த கால அனுபவமாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71-கி)

## சிறுத்தீவில் பல அரண்கள்; இராணுவம் அமைத்திருந்தது

அண்மைய சிறிலங்கா இராணுவநடவடிக்கை காரணமாக மண்டைதீவில் தங்கி நின்ற இராணுவத்தினர் சிறுத்தீவிலும் பலகாவல் அரண்களை அமைத்துள்ளதைத்தற்சமயம் காணக் கூடியதாக உள்ளதாக இங்குமீன்பிடித்தொழில்நிமித்தம் சென்று வந்த குருநகர் மீனவர் தெரிவித்தார்.

இவரின் கூற்றுப்படி ஒரு மைல் சுற்றளவுள்ள இத்தீவைச் சுற்றி பத்துக்காவல் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில்இரண்டு அரண்கள் யாழ் கோட்டையை நோக்கி வடமேற்கு மூலையிலும், இரண்டு அரண்கள் அல்லைப் பிட்டியைநோக்கிதென்மேற்கு மூலையிலும், இரண்டு அரண்கள் கல்முனையை நோக்கி தென்கிழக்கு மூலையிலும் இரண்டு அரண்கள் பாசையூர் ஐந்து மாடியை நோக்கி வடகிழக்கு மூலையிலும் காணப்படுகின்றன.

இவை சிறிய அளவிலான காவல் அரண்களாகும் இவைகளைவிட இரண்டு 5 அடி உயரத்தில் இருபெரிய காவல் அரண்கள் இங்குள்ளதாகவும் கூறுகிறார், இவ்விரு அரண்களுக்கு அருகிலும்படையினர் தங்கியிருப்பதற்கு இரு பெரிய கொட்டில்கள் உள்ளன. இவை தறப்பாள் கொண்டு முகடு போடப்பட்டுள்ளன. அத்துடன் அவைபெண்கள் உடுக்கும்பலவர்ணசீலைகளினாலும் சுற்றிக் கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்தீவில் மிதிவெடிகள் இருக்கலாமென்ற அச்சத்தினால் சிறுத்தீவுக்குசெல்வதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை. (ப- 17கி)

## அமைதிக்கு வழி

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் அடிப்படையில் ஏழு திருவருட் சாதனங்களில் பாவ மன்னிப்பு அருட்சாதனமும் ஒன்று.

புனித மரியாளும் பரகதியில் நின்று இவ்வுலகிற்குஎத்தனை தடவைகள் வந்து செபம், தவம் செய்யுங்கள், மனம் திரும்புங்கள் என அழைப்பு விடுத்தார்.

எனவே நெருக்கடியான காலகட்டத்தில் புனித மரியன்னையின் பிறப்பு விழாவில் பாவ அறிக்கையென்னும் திருவருட் சாதனத்தைப் பயன்படுத்தி திருப்பலிகளில் பங்குபற்றி புனித மரியாளின் மூலம் நம் சமூகத்திற்கு இறைவனின் ஆசியைப் பெறுவோம் என கோப்பாய் புனித மரியாள் பங்கு பொது நிலைப் பிரான்சீஸ்கன் சபையின் சார்பில் பங்குத்தந்தை அருட்திரு. சகாயதாசன் வெளியிட்ட பிரசுரத்தில் குறிப்பிடத்தக்கது. (கி)

## தடுப்பூசி போடலாம்

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலையில் புதன், வெள்ளி ஆகிய இருநாட்களில் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப11 கி)

## அஸ்கார்விருதுக்கு ‘அஞ்சலி’ சிபார்சு

சிறந்த திரைப்படத்திற்காக வழங்கப்படும் பெருமைமிக்க ‘அஸ்கார்’ விருதுக்கு தமிழ்த் திரைப்படமான ‘அஞ்சலி’ இந்திய அரசால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தை பிரபல தமிழக திரைப்பட இயக்குநர் மணி இரத்தினம் இயக்கியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை அறிவித்த சர்வதேச குழந்தைகள் ஆண்டையொட்டியகருத்தின் அடிப்படையில் ‘அஞ்சலி’ திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதைப் பெற பல வருடங்களின் பின் தமிழ்த் திரைப்படமொன்று சிபார்சு செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

# வடஇலங்கை நுண்கலை மன்ற பரீட்சை முடிவுகள் வெளியாகின

வட இலங்கை நுண் கலை மன்றத்தினால் யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 1989-ம் ஆண்டு முதல் முறையாக நடாத்தப் பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வடஇலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் பரீட்சைக்கு ஒப்பான தரத்தை யுடைய இப்பரீட்சையில் முதலாம் தரத்தில் 4 பேரும் 2-ம் தரத்தில் ஒருவரும், 3-ம் தரத்தில் 8 பேரும் முதற்பிரிவில் சித்தியடைந்துள்ளனர்.

சித்திரம், ஓவியம், சிற்பம் ஆகிய பாடங்களில் ஆசிரிய நியமனத்திற்கு இப்பரீட்சையில்சித்தியடைந்தோருக்குமுன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்ஆண்டு 4-ம் தரம்வரையிலும் 1991-ம் ஆண்டு 5-ம் தரம் (ஆசிரியர்) வரையிலும் இப்பரீட்சைகள் நடாத்தப் படும் எனத் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது (70கி)

## தெல்லிப்பழை மருத்துவ மனையில்

# மருந்தின்மையால் இவர்கள் கட்டுமீறப் பார்க்கிறார்கள்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில்தற்போது மன நோயாளர்க்கான மருந்துகள் கையிருப்பில் இல்லாததால் மனநோயாளர் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

இதனால் அவர்களைக் கட்டுப் படுத்துவதற்கு அவ் வைத்தியசாலை ஊழியர்களும் சில கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மருந்து தொடர்ந்தும் இல்லாதவிடத்து அவர்களை உறவினர்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டிய நிலைமை கூட ஏற்படலாம் என்கின்ற நிலையுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப30 ஸ்ரீ)

# குஜ்ரால் நல்ல மனிதர் பாராட்டுகிறார் ஹேரத்

''இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. இந்திரகுமார் குஜ்ரால் நல்ல மனிதர்''

இவ்வாறு ஸ்ரீ லங்கா வெளிநாட்டமைச்சர் திரு ஹரல்ட் ஹேரத் வர்ணித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்விதம் பாராட்டி வர்ணித்தார்.

நியூயோர்க்கில் இருவரும் சந்தித்துச் சம்பாஷித்தது பற்றி அங்கு அவர் விபரித்தார். (ஸ்ரீ)

## ஆயுதப்படை அதிகாரிகளை

# 'தட்டிக் கொடுக்கிறார்' ஜனாதிபதி பிரேமதாஸ

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ ஆயுதப்படையின் ஒன்பது உயரதிகாரிகளுக்கு சிறப்பு விருது அளித்துக் கௌரவித்ததாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதப்படையில் இவர்கள் ஆற்றிய 'சிறந்த பணிக்கே' இவ் விருதுகளை அவர் வழங்கினார் என்றும் கூறப்பட்டது. (ஸ்ரீ)

# ஹெலி நேற்று பத்திரிகை வீச்சு

கோண்டாவில் பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் லேக்ஹவுஸ் வெளியிடும் தினசரிப் பத்திரிகைகள் வீசப்பட்டன.

அரசுக்கு ஆதரவான செய்திகளை இப்பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாகத் தாங்கியிருந்தன. (ஸ்ரீ)

## கொழும்பில்...

டிக்கைமேற்கொள்ளக்கோரித் தாம் பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியுள்ளதாகஅவர் கூறியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

வடக்குக் கிழக்கிலிருந்து கொழும்பிற்கு வரும் தமிழர்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் சொன்னார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் கோட்டையில் இறந்த பன்னிரண்டு இராணுவத்தினரின் உடல்களையும் விடுதலைப்புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர் என ஒப்புக் கொண்ட அமைச்சர் திரு. ரஞ்சன் எப்போது சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன எனக் கூறவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டது. (ஸ்ரீ)

## யாழ்நகர...

கள் முறிந்து விழுந்துள்ளதாகவும், அநேகமான வயர்கள் முற்றாக அறுந்துள்ளதாகவும் இதனைத் திருத்துவதற்கு கொழும்பிலிருந்து உபகரணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (70கி)

## வயாவிளான் கொத்தணிக் கூட்டம்

வயாவிளான் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று எதிர் வரும் திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களையும், அதிபர்களையும் தவறாது சமுகமளிக்கும் படி கொத்தணி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ)

## முஸ்லிம்கள்...

அழகம்மா (60) என்பவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இச் சம்பவத்தையடுத்து வானில் வந்த முஸ்லிம்கள் அருகிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்குள் ஓடிச் சென்று தஞ்சமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

## பலாலியிலிருந்து...

தும் நேற்றுமுன்தினம் இரவு தரையை நோக்கி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இதனால் கீரிமலைப் பகுதியில் வசித்து வந்தோர் இளவாலைப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். (48 ப30 70கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 12-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் தமிழகக் கட்சிகள் ஒருமித்த நிலை!

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் தமிழகத்தில் ஆளும் கட்சி உட்பட பிரதான கட்சிகள் பலவும் ஒருமித்த கருத்தை வலுவான வகையில் கொண்டிருப்பதாக சென்னை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

''யாழ் கோட்டை வெற்றிக்குக் காரணம் நானெனக் கூறப்பட்டால் மகிழ்ச்சியோடு அதனை ஏற்பேன்.'' திராவிட முன்னேற்ற க்கழகத் தலைவரும், தமிழக முதலமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூறினார். திரு. ராஜீவ் காந்தியின் குற்றச்சாட்டு ஒன்றிற்கு பதிலளிக்கும் வகையிலேயே கலைஞர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இலங்கை இனப்பிரச்சினையில் யாழ்ப்பாணக் கோட்டை தற்போது விடுதலைப் புலிகள் வசமுள்ளது. இந்நிலைக்கு நான் தான் காரணமென எதிர்க்கட்சிகள்தெரிவித்தால் மகிழ்ச்சியோடு அதனைஏற்றுக் கொள்வேன்'' என கலைஞர் கூறியுள்ளார்.

## ஜெயலலிதா

''இதேவேளை ஸ்ரீ லங்கா அரசை எதிர்த்துப் பெரும் போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கைத் தமிழினமே அழிக்கப்பட்டுவிடும். விடுதலைப் புலிகளுக்குக்கிடைக்கும் வெற்றியே இலங்கைத் தமிழரின் வெற்றியாகும். ஆகவே தற்போதுள்ள நிலையில் தமிழக மக்களுக்கும், அரசுக்கும் ஒரே ஒருவழி விடுதலைப் புலிகளை ஆதரிப்பதுதான்'' என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் செல்வி. ஜெயலலிதா சிலதினங்களுக்கு முன் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வாழப்பாடி ராமமூர்த்தி

''இதே தருணம் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் தான் ஸ்ரீலங்கா இராணுவத்தை எதிர்த்துப் போராடி வருகின்றனர் என்பதுதான் இன்றைய யதார்த்த நிலை. அவர்களை ஆதரிக்காது விட்டு விட்டால் இலங்கையில் தமிழினம் அழிக்கப்பட்டு விடும்'' என்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

## தி. க

திரு. கி. வீரமணியைப் பொதுச் செயலாளராகக் கொண்ட திராவிடர் கழகமும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஆதரித்து நிற்கிறது.

## நெடுமாறன்

காந்தி—காமராஜ் கட்சித் தலைவர் திரு. பி. நெடுமாறன் விடுதலைப் புலிகளின் அதிமுக்கிய ஆதரவாளர் கடந்த சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணம் சென்ற போது தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துச் சென்றார் என்பதனையும்தமிழக வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. (ஸ்ரீ)

# விபரம் கோரப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகள், அரசினர் வைத்தியசாலைகளில் விசர்நாய்க்கடி மற்றும் விஷகடிகளினால் இறந்தவர்களது விபரங்களை உடனடியாகத் தயாரித்துத் தரும்படி மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவு கேட்டுள்ளது. (ப-11 து)

# வீரமரணம்

நேற்று முன்தினம் திருமலை மாவட்டம் வேப்பங்குளம் பகுதியில் இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் புலிகள் தரப்பில் சங்கர் வீரமரணமடைந்தார். (து)

## புலிகளை...

கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு பதிலிறுத்தார்.

''எமது மக்களுக்கு இலங்கை கணிசமான அளவு பிரதேசச் சுயாட்சி வழங்குமாயின் அதனை ஏற்கலாம். ஆனால் ஸ்ரீ லங்கா அரசியல் யாப்பிலுள்ள ஒற்றையாட்சி இயல்புகள் நீங்க வேண்டும். ஸ்ரீ லங்கா அரசு இதனை வழங்கத் தயாரில்லை என்றால் சுதந்திரமான நாட்டைப் பெறப் போராடுவதனைத் தவிரவேறுவழி எமக்கில்லை'' என்றும் டாக்டர் பாலசிங்கம் தெளிவுபடுத்தியுள்ளார்.

''இந்தியா கவலை தெரிவிப்பதனைவிட அப்பாவி மக்கள் பெருமளவில் கொல்லப்படும் போது அமைதியாக இருப்பது எமக்கு அதிருப்தி தருகின்றது. தமிழினக் கொலை நிகழும் போது இந்தியா இதனைக் கண்டிக்கவில்லை. புலிகள் இந்திய இராணுவத்தலையீட்டை எதிர்க்கின்றது. ஆனால் பிராந்திய வல்லரசு என்ற முறையில் இந்தியா தலையிட்டு அப்பாவிகள் கொலைசெய்யப்படுவதனைத் தடுக்கலாம். இலங்கையில் நிரந்தர அகதிகள் முகாம்கள் நிறுவப்பட வேண்டுமென்ற யோசனையும் அதிருப்தி தருகின்றது.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ

# கோண்டாவில் கொடூரம்; கணவரும் மரணமானார்

நேற்று முன்தினம் கோண்டாவிலில் நிகழ்ந்த கொடூர பொம்மர் தாக்குதலின் போது படுகாயமுற்ற எஸ். வரதராஜா என்பவரும் மரணமுற்றார்.

ஸ்தலத்தில் இவரது மனைவி கொல்லப்பட்டிருந்தார் பாலகனான மகனும் இறந்தார்.

வரதராஜா இ. போ. ச கோண்டாவில் சாலையின் மெக்கானிக்காக சிறந்த பணியாற்றி வந்ததுடன் பலரதும் நன் மதிப்பையும் பெற்றிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப 10 66 ஸ்ரீ)

# யாழ் செயலகத்திற்கு கம்பியூட்டர் வசதி?

ஓய்வூதியம் பெறுவர்களது வவுச்சர்களை தயாரிக்க யாழ் செயலகத்திற்கு கம்பியூட்டர் சாதனங்கள் கிடைக்க கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,

கம்பியூட்டர் சாதனங்களை இயக்கக்கூடிய பயிற்சி பெற்றவர்கள் மூலம் இவ் வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என செயலக வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 18000க்கும் அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்களது வவுச்சர்கள் இதுகாலவரை கொழும்பிலிருந்து பெறப்பட்டு வந்தது அறிந்ததே.

அதுமட்டுமல்லாமல் இளைப்பாறுபவர்களது ஓய்வூதியக் கணிப்பீட்டு வேலைகளும் இனி மாவட்ட ரீதியாகவே செயற்படவிருப்பதால் ஓய்வூதியம் பெறுபவர்கள் காலதாமதமில்லாமல் ஓய்வு பெற்ற சில நாட்களுக்குள்ளேயே தமது ஓய்வூதியத்தைப் பெறக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்கு மின்சாரம் ஒழுங்கான முறையில் கிடைக்கப் பெற்றதும் இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது. (66 ஸ்ரீ)

# தற்காலிகமாக பாதிப்புற்றோருக்கும் இனி நிவாரணம் கிடைக்கும்

வன் செயல்களின் போது ஊனமுற்றுப் பாதிக்கப்பட்வர்களின் நிரந்தர இயலாமை பற்றி வைத்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கு மட்டுமே இதுவரை 25000 ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டுவந்தது.

இனிமேல் தற்காலிக இயலாமை குறித்து வழங்கப்படும் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பவர்களுக்குப் நிவாரணம் வழங்கலாம் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக இயலாமை ஒரு மாதம் வரையிலாயின் மேற்படி தொகையில் 10 வீதமும், 3 மாதம் வரையிலாயின் 25 வீதமும், 6 மாதம் வரையிலாயின் 50 வீதமும், 6 மாதத்திற்கு மேலாயின் நிரந்தர இயலாமைக்குரிய கொடுப்பனவையும் வழங்கலாமெனவும் புனர் வாழ்வு சமூக நலத்துறை அமைச்சு சகல அரச அதிபர்களுக்கும் புனர்வாழ்வுத் திட்டப்பணிப் பாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் பணிப்புரை வழங்கப் பட்டுள்ளது. (கி

## வீரமரணம்...

பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இந்தியா...

குண்டுகள் இலக்குத் தவறலாம். இதற்காக விமான மோட்டியை பிழை சொல்ல முடியாது'என அமைச்சர் பதிலளித்தார் இப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு குறித்துக் கேட்கப்பட்டபோது இந்தியா கஷ்மீரில் என்ன செய்கின்றதோ அதையே நாம் இங்கு செய்கின்றோம் எனக் குறிப்பிட்டார். (து)

# வடமராட்சியில் தொடரும் ஹெலி தாக்குதல்

வடமராட்சியின் சில பாகங்களில் ஹெலித் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

வடமராட்சியில் தொண்டைமானாறு, வல்வை பொலிகண்டி, உடுப்பிட்டி போன்ற பகுதிகளில் தினம்,தினம் மாலை வேளைகளில் ஹெலித்தாக்குதல் நடைபெற்று வருகின்றது.

இத்தாக்குதல்களால் பொலிகண்டி, வல்வெட்டி, போன்ற இடங்களில் உள்ள சிலர் காயமடைந்த நிலையில் மந்திகைவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். (39 கி)